உ
VANMIYUR, MADRAS
[illegible] மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } குரோதன-௵ மாசி-௴ 1926-௵ பிப்ரவரி-௴ { பகுதி 2.

சைவ சமயகுரவர் வணக்கம்.

பொது.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்ப அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருநாவுக்கரசு நாயனார்.

பொய்யுரை நூல்சில புகலுந் தீஅமண்
கையர்கள் பிணித்துமுன் கடல் அகத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் அரசர்தாள் தொழுது போற்றுவாம்

சுந்தரமூர்த்தி நாயனார்.

வறந்திடு பொய்கைமுன் நிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப அன்னதால்
இறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலோன்(று)
அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்.

மாணிக்கவாசக சுவாமிகள்.

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி யடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

மகா பாரதம்.

தர்ம பூமியாகிய இந்தப் பாரதகண்டத்தில், சிந்தனைக்கெட்டாக் காலந்தொட்டு நடைபெற்றுவரும் நம் இந்து மதத்திற்கு முக்கிய ஆதாரங்கள், வேதங்களும், ஆகமங்களும், சாஸ்திரங்களும் இதிகாசங்களும், புராணங்களுமேயாம். இவற்றுள், புராணங்களும் இதிகாசங்களுமே வடமொழிக் காவியங்களுள் தலை சிறந்தனவாகப் பாராட்டப்படுவன.

'இதிகாசம்' என்னும் சொல் 'இதிகம்' + 'ஆசம்' என்னும் இருசொற் புணர்ச்சியா லானது. 'இதிகம்' என்பது 'உபதேசபரம்பரை' என்றும், 'ஆசம்' என்பது 'இருப்பது' என்றும் பொருள்படும். ஆதலின், 'இதிகாசம்' என்பதற்கு, 'உபதேச பரம்பரையில் வந்த பழஞ் சரிதம்' என்பது திரண்டபொருள். இதிகாசங்கள் மறைப்பொருளை விரித்துரைப்பன; பல வைதிக லௌகிக தர்மங்கள் நன்கு புலப்பட இடையிடையே கிளைக்கதைகளைக்கொண்டு உத்தம குணங்களையுடைய ஒரு நாயகன் சரிதையை விரித்துரைப்பன. இக் காரணங்கள் பற்றி இதிகாசங்கள் புராணங்களினும் சிறந்தவை என்பர். இவ் இதிகாசத்தின்பாற் பட்டவைகளே இராமாயணமும் பாரதமும்.

இவற்றுள், 'பாரதம்' என்னும் தொன்னூலை வடமுது மொழியில் இயற்றியருளியோர், நான்மறை வகுத்த நலங்கெழு வியாச மகாரிஷி யாவரென்பது உலகறிந்ததே. இந்நூல் *பரதனது வம்சத்தாருடைய வரலாற்றைக் கூறுவதாதலின், 'பாரதம்' எனப் பெயர் பெற்றதென அம்மொழி வல்லுநர் கூறுப. அவருள் ஒருசாரார் வருணச்சிரம தருமம், ராஜ தருமம், மோக்ஷ தருமம், பல்வகை நீதிகள் முதலியன கொண்டுள்ள காரணத்தால், வேதத்திற் பாரம் (மகிமை) உடைத்தாதலின், 'பாரதம்' எனப்பெயருற்றதெனப் பிறவாறு காரணங்கள் கூறி, அதற்கேற்ப இந்நூற் கதை ஒன்றனையும் சான்று காட்டுப. சிலர் 'பாரதம்' என்பதைப் 'பார்' + 'அதம்' எனப் பிரித்து, 'பார்' என்பதை இடவாகு பெயராகவும், 'அதம்' என்பதை 'ஹதம' என்ற வடமொழித் திரிபாகவும் கொண்டு, 'பூமியிலுள்ள துஷ்டர்களின் அழிவைக்கூறும் நூல்' என்று பொருள்கூறுவர். இது தவறு. ஏனெனில், பாரதம் என்பது சுத்தவடமொழி. மேலும் அது ஒரு

* இப்பரதன் இராமன் தம்பி பரதன் அல்லன் 'பரதகண்டம்' என்பதற்குக் காரணனன ஜடபரதனுமல்லன். பரத நாட்டியத்திற்குக் காரணனன மற்றொரு பரதனுமல்லன். சந்திர வம்சத்தில் துஷ்யந்த மகாராஜனுக்குச் சகுந்தலையிடம் தோன்றிப் பிரசித்திபெற்றவன்.

மொழி, ஆகலின் அதற்கு வடமொழிக்கேற்பப் பொருள் கூறலே பொருத்தமுடைத்து.

சகல உபநிஷத சாரமான கீதையும், இராமாயணம், ஸ்காந்தம் முதலியனவும், அரிச்சந்திரன், நளன், சாவித்திரி முதலியோரைப் பற்றிய சரிதைகளும் அடங்கியுள்ள இத் தெய்வவான் பனுவற்குரிய சிறப்பால் இது 'மகாபாரதம்' என அடைபுணர்க்கப்பட்டு வழங்கும்.

இஃது எழுதாக் கிளவியாகிய தொன்மறைகள் போன்று, கிரியா ஞான விபாவங்களையுடைத்தாய், உறுதிப் பொருள் நான்கினையும் பலகலைகளின் தெளி பொருள்களையும் வருணாச்சிரமமாதி பன்னூறு தருமங்களையும் கூறுவதாதலின், இது 'வேத ஸம்மிதம்' என வடநூற் புலவர்களாற் பெரிதும் போற்றப்படுகின்றது. "பாரத: பஞ்சமோ வேத:", 'நீடாழி உலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே, வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன" என்பன வாதிய மேற்கோள்களும் ஈண்டைக்கோர்க.

வட நூற்பனுவல்களுள், சிறந்தனவாய நான் மறைகளும் வகுத்துப் பதினெண் புராணங்களும் வேதாந்த சூத்திரமும் அருளிய தெய்வப் பெற்றியுடையராய வியாசமகாரிஷியே இந்நூலை யருளியோரெனின், இத் தெய்வப் பனுவலின் பெருமை அளவிட்டுரைத்தற் பாலதே?

வடமொழியில் வேத வியாசபகவான் இதனைச் 'சபாத லக்ஷம்' அதாவது லக்ஷத்திருபத்தையாயிரம் கிரந்தங்களாகச் செய்தருளினர் என்பர் வடநூலார். மற்றும் அவர்கள், இன்னின்னகாலத்து இவ்விவ் நூற்களை இவ்விக் கிரந்த அளவையில் அருளி இவ் இவ் இருடியார்க்கு உபதேசித்து இன்னின்ன உலகங்களிற் பரவச்செய்தனரெனப் பல கூறுப. இவற்றைக் கேட்டறிக இனி, வடநூற் காலவாராய்ச்சி செய்யும் சரித ஆசிரியர்கள், இம் மகாபாரதப் பெரும்பனுவல், ஒரே காலத்து அவ் விருடியால் வெளிப்போந்த தன்றென மறுத்து, பல்வேறு காலந்தோறும் இடைச்செருகலாற் பெருகியதெனச் சான்று பலகாட்டித் துணிபுரைப்பர். இவற்றை விரித்துரைப்பதற் கஞ்சுகின்றேமாதலின், வல்லார்வாய்க் கேட்டுத் தெளிக.

இனி, இப்பாரதத்தை வடமொழியில் இயற்றியோர் வேறு சிலரும் உண்டு. அவர்களிற் சிலர், ஜைமனியும் அகஸ்திய பட்டருமாவர்.

"ஜைமினி பாரதம்" என்பது வியாச சிஷரில் ஒருவரான ஜைமினி ரிஷியால் செய்யப்பட்டதாகும். இப் பாரதத்தில் அசுவமேத பருவம் ஒன்று நீங்கலாக மற்றைய பருவங்கள்யாவும் வியாச சாபத்தால் அக் காலத்திலேயே அழிந்துவிட்டன என்பர்.

அகஸ்திய பட்டர் என்பவர் இயற்றிய நூல், 'பால பாரதம்' எனப்படும். இஃதொரு சிறு காவியம். ஆயினும் இதில் கதை முழுதும் கூறப்பட்டுளது.

முற்கூறியவைகளைத் தவிர, 'பாரத சம்பு' என்ற ஓர் நூலும் உண்டென்றும் அதில் பின்னிட்ட கதைகள் காணப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

வியாச பாரதத்தின் அருமை பெருமைகளைப் பாராட்டி மேனாட்டுப் பல்வேறு பாஷா நிபுணர்கள் இதன் பல பாகங்களைத் தத்தம் பாஷையில் மொழி பெயர்த்துள்ளார்கள். நம் நாட்டுத் தேசாபிமானியான பிரதாப சந்திரராய் என்ற ஆங்கில-ஆரிய நிபுணர், இவ்வரிய நூல் முழுமையையும் சிறு பிள்ளைகளும் எளிதில் உணர வல்ல இனிய எளிய நடையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உபகரித்துள்ளார். ஸ்ரீமத் மகாமகோபாத்தியாயரின் பிரதமசீடராகிய கும்பகோணம் ஸ்ரீமத்: ம. வே. இராமாநுஜாசாரியாரவர்கள், இவ்வியாசபாரதத்தின் நேரிய தமிழ் மொழி பெயர்ப்பை வெளியிட்டுத் தமிழுலகத்தைக் கடப்படுத்தியுள்ளார். பாரதக்கதையை உள்ளவாறே உணர விரும்புவோர்க்கு இவ்விரு மொழி பெயர்ப்பு நூல்களும் பெரிதும் போஜனந்தரும் பேரறிவும் விளக்கும்.

(இன்னும் வரும்)
பத்திராதிபர்,

ஆசிரியரும் மாணுக்கரும்.

(37-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மாணுக்கர்.

இனி, முற்கூறிப சொலற்கருஞ் சிறப்பினையுடைய நல்லாசிரியனை யடுத்து, வழிபாடு முதலியன குறைவறப்புரிந்து, பாடங் கேட்போரே மாணுக்கராவர். நல்லாசிரியனை யடுத்துக் கேட்டிலாாயின், அவரது கல்வி, கேட்டலினுல் ஆம் அத்துணை உறுதியுடைத்தாக மாட்டாது. "குருவிலார்க்கு வித்தை இல்லை" யென்பது பொய்யாகாது, "உடையார்முன் இல்லார் போல் ஏக்கற்றுங் கற்றார்" உயர்ந்தோரே யென்பது, பொய்யா மொழியாகலின். ஆசிரியர்க்கு எவ்வளவு இழிப்படிந்து ஊழியஞ்செய்தாலும், அவையெல்லாம் மாணுக்கரது உயர்ச்சிக்குக் காரணமே தவிர வேறில்லை. சோம்பல், மறதி, மாறுபாடு, வஞ்சம், மானம், சினம் முதலிய தீக்குணங்களுடையோரும், தீத்தொழில் புரிவோரும், மாணுக்கராக மாட்டார்கள். மாணுக்கர்கள், கல்வியும் நிறைந்த விருப்பமும் ஊக்கமு முடையராதல் வேண்டும்.

மழைத்துளியானது முத்துச் சிப்பியின் வாயில் விழுந்தால் முத்தாகப் பரிணமிக்கின்றது. தாமரையிலையில் விழுந்தால் விழுந்த அளவினதாக இருக்கின்றது. பழுக்கக் காய்ச்சிய இரும்பில் விழுந்தால் சுவறிவிடுகின்றது. அங்ஙனமே ஆசிரியன் கற்பிக்கும் நூற்பொருள், உத்தம மாணுக்கரைச் சார்ந்தால் விசேஷ நலத்துடன் வெளிப்படுகின்றது; மத்திமரைச் சார்ந்தால் அவ்வளவில் நிற்கின்றது. அதமரைச் சார்ந்தால் பயனின்றி அழிந்து விடுகின்றது.

நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னம் போன்று, ஆசிரியன் கற்பித்தவற்றில் நலமுள்ள பொருள்களைப் பகுத்து மனத்திலமைத்துக் கொள்வோரும், உணவு கிடைத்தவிடத்து வயிறாரமேய்ந்து, பின் சிறிது சிறிதாக வாயிற் கொணர்ந்து சிரணிப்பிக்கும் பசுவைப் போன்று, மிகுதியான பொருள்களைக் கேட்டுக் கொண்டு, பின் அவற்றைச் சிறிது சிறிதாகத் தம் கவனத்திற்குக் கொண்டு வருவோரும், உத்தமர்களாவார்கள்.

பாடங்கேட்கு முறையைப்பற்றி நன்னூலாசிரியர் கூறுவது,

"'கோடல் மரபே கூறுங்காலை,
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்,
குணத்தொடு பழகி அவன் குறிப்பிற் சார்ந்து,
'இரு' என இருந்து 'சொல்' எனச்சொல்லி,
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகி,
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கி,
செவிவா யாக, நெஞ்சுகளன் ஆக,
கேட்டவை கேட்டவை விடா(து)உளத் தமைத்து,
'போ'எனப் போதல், என்மனார் புலவர்."

என்பது.

மாணுக்கர்கள், கேட்ட பாடங்களைச் சிந்தித்துப்போற்றலும், நூல் வழக்கு உலக வழக்குகளை ஆராய்ந்தறிதலும், தம் போன்ற மாணுக்கர்களுடன் பயிலுதலும், அவசியமாகும். கற்றூர்பால் தாம் கற்றவைகளை ஏற்குமாறு சொல்லி, தம்மின் மிகுதியாகக் கற்றவரிடத்திருந்து அம் மிகுதியான பொருள்களைக் கொள்ளுதல் வேண்டும். ஆசிரியன்பால் அன்பும் அச்சமும் உடையராய், அகலாமலும், மிக நெருங்காமலும், நிழல் போற் ருெடர்ந்து, மரியாதையுடன் ஒழுகுதல் வேண்டும். மற்றும், ஆசிரியர்க்கு 'உற்றுழி உதவியும், உறுபொருள் :கொடுத்தும், பிற்றை நிலை முனியாதும்' கற்றல் நன்றே, நூற்பொருளே யாயினும் வழிபாட்டு முறையானன்றி, வஞ்சனையாற் கொள்ளக் கருதுதல் அதிபாதகமாகும். தம்பாலுள்ள பிழைகளைத் தீர்த்தற் பொருட்டும், தமக்கு நல்லறிவு கொளுத்தற் பொருட்டும், ஆசிரியன் ஒரோவழி இடித்துக் கூறுதலும், தண்டித்தலும் கூடும். அப்பொழுது அவை தம் நன்மையினிமித்தமெனக் கருதித் திருந்

தனுறுவோரே விவேகமுள்ள பிள்ளைகளாவார். ஆசிரியன் கற்பிக்கும் அரும்பொருளையும் எளிதின் உணர்ந்து கொள்வதனுலேயே அவனது அன்பைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். "நெஞ்சுற அருங்கலை கள் கற்பவர்கள் தம்மளவில் நேயமில்லாதவர்கள் யார்?"

மாணவர்களுக்குக் குரு பக்தியானது, எல்லாவற்றினுஞ் சிறந்தது. 'எழுத்தறிவித்தவன் இறைவனுகும்' அன்றோ? ஒரு குழந்தை இயல்பாகவே தன் தாயையும், பின் தாயுணர்த்தத் தந்தையையும், தந்தை யுணர்த்தக் குருவையும், குரு வுணர்த்தத் தெய்வத்தையும் அறியும் முறை பற்றி 'மாதா பிதா குரு தெய்வம்' என வழங்கு வாராயினர். இதனுல் குருவானவர், தெய்வத்திற் கடுத்தபடியிலுள்ளா ரெனத் தெரிகிறது. அன்றி, 'மாதா, பிதா, குரு' என்ற மூவரும் தெய்வமாவர்" என இத்தொடர்க்குப் பொருள் சொல்லினும் பொருந் தும். அரசனும், உபாத்தியாயனும், தாயும், தந்தையும், தமையனும், குரவர்களாவார்களென்றும், இவர்களைத் தெய்வமாகக் கருதித் தொழ வேண்டு மென்றும், நம் நூல்கள் விதிக்கின்றன. நம் நாட்டுச் சிறு வர்கள் சுவடியை யெடுத்துப் படிக்கத் தொடங்கும் பொழுதும், படித்து நிறுத்தும் பொழுதும், 'குருவாழ்க; குருவே துணை' என்று கூறிவந்த வழக்கம், நமது குரு பக்தியை எவ்வளவு தெளிவாகக் காட்டுகிறது? குரு நிந்தை செய்வோரினும் அதிபாதகர் யாருமில்லை.

"ஓரெழுத் தொருபொருள் உரைக்கக் கூடிய
சீரெழுத் தாளரைச் சிதைபச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனுய்ப் பிறந்து அங்(கு) ஓர்உகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே."

என்று தவராஜ யோகிகளான திருமூலர் கூறுகின்றார். ஆசிரியன் ஒவ்வொன்றையும் தனக்குக் கற்பிக்காவிடினும், ஆசிரியன் பாற் செலுத் தும் அன்பு மிகுதியானே எல்லாக் கலையுணர்வும் எளிதின் வந்து விடும். ஏகலைவன் துரோண விக்ரஹத்தை அன்புடன் வழிபட் டன்றோ ஒப்புயர்வற்ற வில்லாளியானுன்?. உதங்கன் முதலியோரது குருபக்தி, மகாபாரதத்தில் எவ்வளவு கொண்டாடப்படுகிறது! குரு வாக்கிய பரிபாலனமே மாணுக்கர்களுக்கு உண்மையான அறமாகும். தாடகையின் கொடுமைகளை எடுத்துக்கூறி அவளைக் கொல்லுமாறு கௌசிகர் பணித்தவளவில், முன்பு அவளைப் பெண் என நினைத்து ஒதுங்கியிருந்த பெருந்தகையாகிய இராமன், அவர்க்கு எதிர் கூறு மாறு கம்பர் கூறுவது,

"ஐயன் அங்கது கேட்(டு)அறன் அல்லவும்
எய்தி னல்அது செய்கவென் றேவினல்
மெய்ய! நின்னுரை வேதம் எனக்கொடு
செய்கை யன்றோஅறஞ் செய்யுமா றென்றான்"

என்பது காண்க.

மாணுக்கர்கள், ஆசிரியன் திருமுன், வாய்மையுடனும் ஆசாரத்துடனும் ஒழுகுதல் வேண்டும். தாம் கல்வியிலும் நிலையின் நீங்கி எவ்வளவு உயர்ந்த பதவியை யெய்திய காலத்தும், தம் ஆசிரியரை நினைத்து உருகுதலும், அவர்கள் எதிர்ப்படின் அளவிலன்புடன் உபசரித்தலும், தம்நல்வாழ்விற்குக்காரணங்களாகும். வனவாசங் கழித்து வந்த பாண்டவனை அர்ச்சுனன், விராடநகர்ப்புறத்து நிரைமீட்கப் போர்க்கோலம் தாங்கிவந்த பொழுது, துரியோதனன் படை நின்ற தனது ஆசாரியர்கட்கு முதலில் அஸ்திர வாயிலாகத் தன் வழிபாட்டினைத் தெரிவித்துக் கொண்டதும், துரோணர் தன்னுடன் போர்புரிய வந்தடுத்த பொழுது,

"யாதுமொன் றறியா என்னை 'இவனலா(து) இலை'யென் றிந்த
மேதினி மதிக்குமாறு வில்முதற் படைகள் யாவும்
நீதறத் தந்த உண்மைத் தெய்வம்நீ என்றால், பஞ்ச
பாதகந் தன்னிலொன் (று)உன் பதயுகம் பிழைப்ப(து) ஐயா"

என அன்புமயமான சொற்களைச்சொல்லிப் போர்செய்ய மறுத்ததும், ஒப்புயர்வற்ற வில்லாளியும் சிவபக்த சிரோமணியுமான அவ் அருச்சுனனது குருபக்தியின் மேன்மையை விளக்குகின்றன.

சில ஆண்டுகட்கு முன் நடைபெற்ற கல்கத்தா யூனிவர்ஸிடியின் பட்டமளிப்புத் திருநாளில் வங்காள கவர்னராகிய லார்டு கார்மிக்கேல், மாணுக்கர்களுக்குக் குருநிந்தையால் வருந் தீங்கையும் குருபக்தியின் மேன்மையையும் நமது மனுதரும சாஸ்திரத்திலிருந்து எடுத்துக்காட்டி வற்புறுத்தியதும், நமது இராஜப் பிரதிநிதியாயிருந்து இங்கிலாந்து சென்ற லார்டுஹார்டிஞ்சு பம்பாய் யூனிவர்ஸிடியார் தமக்கு "எல். எல். டி. பட்டம்" சூட்டியபொழுது 'மாணுக்கர்கள் தன்னடக்கமும், தன்னலமறப்பும் உடையராய் விளங்க வேண்டு'மென்று பரிந்து பேசியதும், நம் தேயத்து மாணுக்கர் ஒவ்வொருவர் மனத்திலும் வேரூன்றியிருத்தல்வேண்டும். இப்பொழுது மாணுக்கர்களாயிருப்போர்களே இனிப் பெரியோர்களாதலின், இத்தேசத்தின் உன்னத வாழ்விற்குக் காரணராக இருப்பவர்கள் இவர்களே.

பொது.

ஆசிரியரும் மாணுக்கர்களும் ஒருவர்க்கொருவர் அன்புடையராய், பரோபகாரசிந்தையுடையராய் இருப்பரேல், இவ்வுலகம் எவ்வளவும் மேனிலை யடைந்து விடும். "ஒவ்வொரு சிறந்த முயற்சியும் தம் பொருட்டாகஇல்லாமல் பிறர்பொருட்டாகவே முயலும் பெருமையுடையோர் இருத்தலினுற்றான் இவ்வுலகம் நிலைபெற்று வருகின்றது" எனப் புறநானூற்றில் ஒருபெரியவர் கூறுவதைச் சிந்தித்தொழுக.

பண்டிதர்: மு. வேங்கடசாமி நாட்டார்,
தலைமைத் தமிழாசிரியர் பிஷப் ஹீபர் காலேஜ், திரிசிராபுரம்.

பராந்தகன்.

இரண்டாம் காட்சி.

இடம்:—மதுரை: ஒரு பாழ் வீட்டு முன்றில்.

காலம்:—நள்ளிரவு

பாத்திரங்கள்:—பரமானந்தப் பரதேசி, கறுப்பன், அமாவாசை.

பரதேசி:—ஆ! கடவுளே! எல்லாம் உன் திருவிளையாட்டே! முன்பு நான் எவ்வளவு குதூகுலமாகக் காலங்கழித்து வந்தேன்! ஐயோ! இச்சகம் பேசி என் பொருளெல்லாம் பறித்து வயிறு வளர்த்து வந்த எனது உற்றோரும் மற்றோரும், என் கைசலித்துப்போன இக்காலத்தில், 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை' யாயினரே! தேகபலமும் மனோபலமும் மதிவன்மையும் வாய்ந்தும், நான் வறுமையால் வருந்திச் சிறுமையுற நேர்ந்த தென்ன பரிதாபம்!. விதியே! பாழும் விதியே! நீ படுத்தும்பாடு சகிக்கத் தாமன்று.

† காகமோடு கழு(கு) அலகை நாய்நரிகள்
சுற்றுசோறிடு துருத்தியைக்
காலிரண்டு நவ வாசல் பெற்றுவளர்
காமவேள் நடன சாலையை
மோக ஆசைமுறி யிட்ட பெட்டியைமு(ம்)
மலமிகுந் தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்கலார் கிடை சரக்கினை
மாகஇந்திர தனு மின்னை ஒத்திலக
வேக மோதிய குலாலனார்
வனைய வெய்யதடி காரன் ஆனயமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மான பொ(ய்)யை மெய்யெனக் கருதி
ஐய! வையமிசை வாடவோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற் சுகோதய விலாசமே!

*"பூணும் பணிக்கல்ல; பொன்னுக்குத் தானல்ல; பூமிதனைக்
காணும் படிக்கல்ல; மங்கையர்க் கல்ல;நற் காட்சிக்கல்ல;
சேணும் கடந்த சிவனடிக் கல்ல; என் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே."

† தாயுமானவர் * பட்டினத்தார்.

நேற்றிரவு கோவிலில் 'உண்டைக்கட்டிப் பிரசாதம்' மட்டும் கிடைத்திராவிட்டால் நான் இதுவரை உயிர் பிழைத்திருப்பதேது? பசியால் நான் நேற்றிரவு பட்டபாடு நாயும் பட்டிராது. நேற்று இத்தறுவாயில் குணமிழந்த அக் கொடியவனைக் குறுகி, உடல் குறுகி, நாண்துறந்து, வாய் திறந்து இரந்தும், ஒரு காசேனும் தர அப்பாவியின் மனம் இசையவில்லையே! "பஞ்சவன்றன் நான் மாடக் கூடலில் கல் வலிது" என்று ஔவை கூறியது அக்காலத்திய பாண்டிநாட்டியல்போலும்! இப்பொழுது பாமலோபிகளும் படு பாவிகளுமே நிறைந்தது போலும் இப்பாழ் ஊர்! சென்றதை நினைத்து வருந்திப் பயனென்ன? இன்றும் இதுவரை உணவிற்கு ஒரு வழியும் இல்லையே! தனபாலனிடமிருந்து பறித்த யாவும் என் கைவசமிருப்பினும், அதில் துரும்பேனும் தொடுவேனோ?

"பிறர்மனை யவரைப் பெற்றதாயெனவும்
பிறர்பொருள் எட்டியே எனவும்
பிறர் வசை உரைத்தல் பெருமையன் றெனவும்
பிறர் துயர் என் துயர் எனவும்"

எண்ணியொழுகலே எனது இயற்கை. ஆனால், ஐயோ! யோக்கியர்களுக் கிது காலமில்லை. எவரும் நடுங்கும்படியான குரூரச் செய்கைகளையே இனி நான் கைக்கொள்ள வேண்டும்போலும். இல்லையேல், உயிருடன் இருக்கமுடியாது.—ஆனால், அங்ஙனம் செய்வேனாகில், யான் என் தந்தைக் களித்த வாக்கு யாதாகும்? ஆனால் அதனைப்பற்றி இப்பொழுது யோசிப்பதிற் பயனில்லை. என் தந்தையின் பரிபூரண ஆசீர்வாதமட்டும் எனக்கிருந்தால் ஏன் எனது அதிபாதகச் செயல்களாலும் உலகிற்கு நன்மையே விளையலாகாது? இருக்கட்டும். இன்னும் பொறுத்துப் பார்க்கிறேன். ஈசன் விட்ட வழி விடட்டும்.

[பாடுகிறான்.]

*"எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததுவும் போதும் பராபரமே!"

"இன்று புதிதன்றே எளியேன் படுந்துயரம்
ஒன்றும் அறியாயோ உரையாய் பராபரமே!"

[கறுப்பனும் அமாவாசையும் வருகிறார்கள்.]

* தாயுமானவர்.

கறு:—இக்குட்டுத்தான் வந்தாங்கறேன்.

அமா:—போடா ஆரைப்பாத்தியோ? வந்தா, வந்தவன் எங்குட்டா போயிடுவான்?

கறு:—நான் சொல்ரதென்ன பொய்யிண்டா நெனச்சே? அன்னி முளுதும் அவம்மேலேயே யில்லெ கண்ணாயிருந்தேன்: கொஞ்ச நாளிக்குமுந்தி இக்குட்டு நொளஞ்சான். ஒனக்குச் சாடெ காட்டத் திரும்பினேன். அதுக்காட்டியில்லே, பய, எங்குட்டோ மறஞ்சிட்டான்.

அமா:—அப்போ எங்குட்ரா போயிடுவான்? இக்குட்டுத் தாண்டா எங்கேநாச்சும் இருப்பான்.

கறு:—(காதகொடுத்த) இர்ரா! இர்ரா!! இர்ரா!!!

அமா:—ஏண்டா? என்னுத்துக்கடா?

கறு:—அந்தாலெ பாட்டுப் படிக்கிரும் பாரு. அந்தப் பயதாண்டா.

அமா:—ஆளெ நல்லாத் தெரியுமாடா?

கறு:—பூ! இப்புட்டுத்தெரியாது? குட்டிச்செவுத்துலெ முட்டிக்க வெள்ளெளுத்தா? முனியாண்டி யாட்டமா மீசிதாடிபோடே அதோ யிருக்காம்பாரு. அவந்தாண்டா வாடா.

பர:—(காதுகொடுத்து 'அவன்தான்! அவன்தான்!' என்று யாரோ சொல்லுகிறார்களே. அவர்கள் யாராயிருக்கலாம்? யாரைக் குறித்துச் சொல்லுகிறார்கள்?

[நாலாபக்கங்களிலும் பார்க்கிறான். இருவரும் தன்னையே சுட்டிச்சுட்டிப் பேசுவதைக் கவனித்தறிகிறான்]

சரிதான். இவர்கள் பேசிக் கொள்வதெல்லாம் என்னைக் குறித்தே தான். எதற்காக என்பது மட்டும் இப்பொழுது தெரியவில்லை. திருட வந்தவர்களாயிருந்தால் 'அவன் தான் அவன் தான்' என்பானேன்? அவர்கள் ஏதோ கெட்ட எண்ணத்துடன் வந்தோர்களாகவே இருத்தல் வேண்டும்.—ஒரு வேளை, தனபாலனிடமிருந்து நான் கவர்ந்தவற்றை இவர்கள் கண்டுகொள்ளநேரின், அவற்றைக் கைப்பற்ற முயலவும் கூடும். இந்தச் சங்கடத்திற்கு இப்பொழுது என்ன செய்யலாம்? ஆயினும் இச்சமயம் எதற்கும் நான் தைரியத்தைக் கைசோர விடக்கூடாது. வருவது வரட்டும். ஒருகை பார்க்கிறேன். [முண்டாக் தட்டுகிறான்]

அமா:—அடே! நம்மெக் கண்டுக்கிட்டான் போலேயிருக்குடா. ஆளு பக்கா ஆசாமி. முண்டாத் தட்டினதெப் பாத்தியா?

கறு:—அடி ஆத்தே! அவம் முறட்டுத் தடியனில்லே. என்னெயறிஞ்சாலும் அறிஞ்சிக்கிட்டிருப்பான்.

பர:—(தனக்குள்) ஒகோ! இவன் நமது நேற்றைய சிநேகனா? நல்லது.

[ஒன்றும் கவனியாதவன்போல் பாடுகிறான்]

§"அறக்கடல் நீயே; அருட்கடல் நீயே;
அருங்கருணாகரன் நீயே;
திறக்கடல் நீயே; திருக்கடல் நீயே;
திருந்துளம் ஒளிபெறு ஞான
நிறக்கடல் நீயே; நிகர் கடந்தலகின்
நிலையும் நீ; உயிரும் நீ. நிலை நான்
பெறக் கடன் நீயே. தாயும் நீ எனக்குப்
பிதாவும் நீ; அனைத்தும் நீ யன்றோ?

அமா:—இருடா—இருடா. அரண்டவங்க கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்டா. நம்ம நெனைச்சது சரியில்லெ. கொசுக் கிசு கடிச்சிருக்கும். தட்டிக் கிட்டியிருப்பான். நம்ம, முண்டாத் தட்றானிண்டு நெனச்சிட்டோம். என்ன உருக்கமாப் பாட்டுப் படிக்கிறான் பாரு. இது தாண்டா சமயம். அப்படீச் சுத்திக் கிட்டு வருவோம். வா! லபக்குனு அவம் பொறகாலே போய்ப் பாய்வோம்.

பர:—(தனக்குள்) நல்லது. வாருங்கள். (வெளிப்படையாய்) ஹ்ம்—அப்படியா? நல்லது. நல்லது.

[வாயால் ஊதிய வண்ணமாய்
இருவரையும் பார்க்கிறான்.]

கறு:—போடா பைத்தியமே. ஒன் ரோசனே நல்ல ரோசனே! கண் குத்திப்பாம்பா நம்மையே பாத்துக்கிட்டிருக்காங்கரேன். இருந்திருந்து ஒம்புத்தி போச்சே. கொசுக்கடிச்சுதாம்! முண்டாத் தட்டினானும்!! அவங் காலிச் சொக்காக்குள்ளே பூந்திடிச்சோ கொசு? அதுக்குத்தாஞ் சொல்லிவிட்டே. இப்போ சிட்டி அடிச்சானே, அது எதுக்குடா? "வாங்கடா பயகளா, ஒரு கை பாத்துட்டேன்" இண்டு தானே?

[பரதேசி கத்தியை வெளியி
லெடுத்து அவர்களறியக்

---

§ தேம்பாவணி.

[காட்டி ஒன்றுமறியாதவன் போல் உடையிற் செருகிக் கொள்ளுகிறான்]

அமா:— அடே! ஆமடா, நான் என்னமோண் டில்லே இருந்தேன். ஒம் வாய்க்குச் சக்கரை தாண்டா போடஹணும். அந்தப்பயலுக்குப் பாம்புச் செவிடா. நம்ம பேசினது அவன் காதிலே விளுந்திருக்குடா. கொஞ்ச நாச்சும் அவனுக்குப் பயங்கியம் இருக்காபாரு.

கறு:—அதானே சொல்ரேன். ஆத்தாடி! கத்தியுமில்லே வச்சிக்கிட்டுருக்கான். நம்ம மட்டும் இப்பப் போனேமோ, ஆப்பிட்டுக்கிட்டோம். செத்தோம், ஆம்மா—சத்தியமாச் சொல்ரேன்: நான் நேத்தி நரி மூஞ்சிலே தான் முளிச்சிருக்கணும். இல்லாட்டி என் உசிரு அன்னிக்கே போயிருக்கும். எங் கத்தியும் தட்டிப் பய என்னெச் சாச்சு, இடுப்பையுமில்லே முறிச்சிட்டான்.

அமா:— அதுக்கு இப்ப என்னடா செய்யணு மிங்கரே? பெரியவுக நேத்தி அந்தத் ஏனபாலனெ வேலபெச்சாச்சுப் போடல்லே யிண்டு ஒன்னெ என்னபாடு படுத்தினுக? எப்படிநாச்சும் இந்தப் பயலெ இப்பக் கொண்டுபோகாட்டி நம்மஉசுரு பொளக்கிமாடா? இப்பொ நானுமில்லே அதுக்கு வளி சொல்லனும்.

கறு:—அதுதாண்டா நானும் ரோசிக்கிறேன். வாரியா? ஒருகை பாப்போம்.

அமா:—ஆத்தாடி! அந்தப் பயலெப் பாத்தாலே குபீர் இங்குதே. நாம் ஒண்டியாப் போய் என்னடா செய்யாது?—இந்தா நான் சொல்ரத்தைக் கேளு: நீ பய மேலேயே கண்ணுயிரு. நான் போய்க் கலுவணைக் கூட்டிக்கிட்டு அரநொடிலே ஓடியாரேன்.

கறு:—அதாண்டா சரி. பொக்குண்டு வந்திடு; கலுவனை மட்டு மில்லெ. வீரனையும் கூட்டிக்கிட்டுவா. பெரியவுகளையும் எப்படியாவது கூட்டியாந்தாலும் நல்லது தான்.—அண்ணே! எனக்கொரு சந்தேகம்: நீ போனத்துக்கப்புறம் நான் ஒத்தன் தான் இருக்கேனுண்டு, பய, தைரியமா எங்கேயாவது கம்பி நீட்டிட்டா என்ன செய்யறது? அப்படியில்லேண்டு வச்சுக்குவம். 'அப்போ இடுப்பே ஒடிச்சது பொய். இப்போ நிசமிண்டு ஏன்னை ரெண்டு போடு போட்டா என்ன செய்யாது? கையிலே என் கத்தியில்லே

வச்சிருக்கான். அதுக்காக இல்லே ரோசிக்கிறேன். என் கத்தியிட்டே என்னைக்குத்திக் கொண்டுபோட்டாலும் போட்டுவானே,

அமா:—நீ எப்போதும் அளுகமூஞ்சி; விடியாமூஞ்சிப்பய. ஆனா நீ சொல்ரதும் சரிதான். அந்தப்பயலே நம்பப்படாது தான். நீயும் வா. ரெண்டு பேரும் போவோம். சமுசாரம் இப்படியிருக்குண்டு பெரியவுகளுக்குச் சொல்லுவோம். அவுக சொல்றபடி கேப்போம். பய எங்கே ஓடுவான்? இன்னிக்குத் தப்பிச்சாலும் என்னிக்காவது ஆப்புட்டுக்கிட மாட்டான்? எம னறியாமலா உசுரு போகும். வா போவோம்.

[இருவரும் போகிறார்கள்]

பா:—நல்லவேளை, இரண்டு சனியன்களும் தொலைந்தன. தனபாலன் இனி நல்வழிப்படுவதற்காவன செய்து, அவன் பொருளை (அற்பத்துரும்பும்) என்னிடம் வைத்துக் கொள்ளாமல் அவனிடம் அதிசாவதானமாய் ஒப்பிக்கக் கருதிய எனக்கு, அதனை வேற்றிடம் தேடிச் சேமிக்க நற்சமயம் வாய்த்தது, ஈசனது திருவருளேயன்றி வேறில்லை.

[பாடுகிறான்]

*"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்தொட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

[போகிறான்.]

[இரண்டாம் காட்சி முற்றிற்று.]

திருக்குடந்தை: ஆயக்கண்ணனர்.

விடுகதை வினு.

'ஆடிரண்டு முட்டையிடல்'; 'அப்பனையே நாரியார்
கூடி மருவியிடல்'; 'கோழியிலே—நாடி
ஒருகுடம் பால்கறத்தல்'-ஒண்ணுமேல், யாங்ஙன்?
தருகவிடை செய்யுளிலே தான்

—T. S. பிரணதார்த்திஹரையர், பூவனூர்.

---

* ஔவையார்.

பெஞ்சமின் பிராங்க்லின், Benjamin Franklin.

அத்தியாயம் 2.

வேலைக் கமர்தல்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார் — குமரகுருபரர்.

தம் மகன் எப்பொழுதும் புத்தகமும் கையுமாய் இருப்பதைப் பார்த்த தந்தை, அவனது அவாவை வியந்து, அவன் ஏமாந்து ஊக்கம் குன்றாதிருக்கவும், இயன்றவாறு அறிவும் நலமு முறவும், ஓர் அச்சுயந்திரசாலையில் அவனை வேலைக்கு அமர்த்த எண்ணினார். அது அவருடைய மூத்த குமாரன் நிறுவி நடத்திவந்த ஒரு முத்திராலயம்.

அங்கு, பிராங்க்லின், தன் சகோதரனிடம் ஒன்பது வருஷம் வேலை கற்றுக்கொண்டு தீரவேண்டு மென்றும்; அவனை வேலைக்கு வைத்துக்கொண்ட இவ்வொன்பது வருஷங்களிலும் அவன் தமையன் அவனைத் தக்கவாறு சம்ரக்ஷணைசெய்து தீரவேண்டு மென்றும் தந்தை மூலம் இவர்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து முடிக்கப்பட்டது. பையன் முழுமனதுடன் அச்சுக் கோக்கும் வேலையிற் புகுந்து அதனை ஆவலுடன் கற்கலானான்.

இத் தொழிலில் அவன் அமர்ந்திருக்கும்போது, அவனுக்குப் படிக்க நல்ல நல்ல புத்தகங்கள் கிடைத்தன. மற்றும், அவன் அந்த அச்சுயந்திரசாலையை அடுத்த புத்தகக் கடைகளில் வேலைபார்க்கும் சிறுவர்களைச் சிநேகஞ்செய்து கொண்டு அவர்களிடமும் புத்தகங்களை இரவலாகப்பெற்று அவற்றை வாசிப்பான். அவற்றை அவன் வாசிப்பதெல்லாம் இராவிலேயே, வெகு நேரம் விழித்திருந்து மிக்க ஊக்கத்துடன் அவற்றைப் படித்தானதும், அதிஜாக்கிரதையாய் அவற்றை, வாங்கிய கடையில் சேர்ப்பித்துவிடுவான். இம்மியும் அவற்றில் அழுக்கேறவிடான். படிப்பில் அவனுக்கிருந்த அக்கறைதான் என்னே!

தற்காலத்திலென்றால், படித்திட மாணவர்களுக்கு எவ்வளவோ சாதனங்கள் இருக்கின்றன. புத்தகசாலைகளை ஊரெங்கும் காணலாம். இக்காலத்தே தடுக்கிவிழுந்தால் புத்தகத்தின்மேல்தான் விழவேண்டும். இவ்வாறெல்லாமிருந்தும், அக்கறையாய்ப் படிப்பவர்களைத்தான் காண்டல் அரிதாயிருக்கிறது.

பெஞ்சமின் பிராங்க்லினுடைய புத்தி சாதுரியத்தைக்கண்ட போஸ்டன் வியாபாரி ஒருவர், தம் புத்தகங்களை அவனுக்குப் படிக்குமாறு வலிந்து கொடுத்துதவினர். ஒருநாள் பெஞ்சமின் "சுலோசனன்" (Spectator) என்ற பத்திரிகையின் தொகுதி ஒன்றைக் கண்டு அதைப்படித்து ஆனந்தமடைந்தான். உடனே அதன் ஒரு பிரதி வாங்கினன். அதில் உள்ள விஷயம் யாவும் வெகு நல்ல நடையில் எழுதப்பட்டிருந்ததைக்கண்ட பெஞ்சமினுக்கு அதைப்போன்ற நடையில் தானும் எழுதவேண்டுமென்ற ஆசைபிறந்தது. பிறக்கவே, அதேமாதிரி தானும் எழுதமுயன்றான். ஒரு வியாசத்தைப் படித்து அதில் உள்ள சமாசாரத்தை எழுதுவான். பின்பு தான் எழுதியதில் உள்ள பிழைகளைக் களைந்து மறுபடியும் எழுதிப் பார்ப்பான். இவ்வாறே தனக்குத்திருப்தி உண்டாகும்வரை பன்முறை செய்வான். பல மாதங்கள் அவன் இவ்வாறுசெய்துவந்தான். அவன் அரைக்கணமேனும் வீண்பொழுது போக்கான். ஒழிந்த நேரங்களிலும், அதிகாலையில் வேலைஆரம்பிப்பதன் முன்னும், தவறாமல் புத்தகங்களைப்படித்து வருவான். வீடு சென்று சாப்பிடுவதில் காலதாமதம் நேர்வதைக் கண்டு, அச்சுக்கூடத்திலேயே சமைத்து உண்ணலானன். இவ்வாறு கஷ்டப்பட்டு வேலைசெய்ய நேர்ந்த காலத்தும், அவன், மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், கண் துஞ்சாமலும், கல்வி, வளர்ச்சி பெறப் படித்து வந்தது எவ்வளவு வியக்கத்தக்கது!

பிராங்க்லினுக்கு வயது பதினறு நிரம்பியது. அச்சமயம் அவன் சகோதரன் ஒரு சமாசாரப்பத்திரிகையை நடத்த ஆரம்பித்தான். பெஞ்சமின் அப்பத்திரிகை விஷயங்களை அச்சில் கோத்துப் பத்திரிகைகள் அடித்து அவற்றைத் தானே சந்தாதார்கள் வீட்டுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பது வழக்கம்.

இச் சமாசாரப் பத்திரிகை எல்லோருடைய மனதையும் கவர்ந்தது. போஸ்டனில் விஷயதானம் செய்யவல்லோர் பலர், அந்தஅச்சுக்கூடத்தில்கூடி, உலகத்தில் நிகழும் பல விஷயங்களைப்பற்றிப் பத்திராதிபனான அவன் தமையனுடன் பேசுவது வழக்கம். பிராங்க்லின் அவர்கள் சம்பாஷணையை அதிக ஆர்வத்துடன் கவனித்து வந்தான், தானும் ஒரு விஷயத்தை எழுதிப் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்று நினைத்தான். ஆனல் தான் எழுதின விஷயமெனத் தெரிந்தால், தன் சகோதரன் உபேக்ஷை செய்து ஒதுக்கி விடுவான் என்பதை நன்கறிந்த பிராங்க்லின், தன் விருப்பு நிறைவேற ஒரு சூழ்ச்சி செய்தான்: ஒருநாள் ஏதோ ஒரு விஷயத்தை எழுதி அதனைக் கையெழுத்திடாமல் தன் தமையன் அறைக்குள் போட்டு விட்டான்.

அது தமையன் கையிற் கிடைத்ததும், அவன் அதைப் படித்து விட்டு அவ் விஷயத்தைத் தன் சிநேகர்களுக்குக் காட்ட, அவர்கள்

அதைக் குறித்துச் சிந்தித்து "விஷயம் நன்றாய் எழுதப்பட்டிருக்கிறதே! இதை எழுதினது யாராய் இருக்கலாம்?" என்று வியந்து கூறினர். இந்த விஷயம் பத்திரிகையில் உடனே பிரசுரமானது. இது கண்ட நம் பெஞ்சமினுக்கு அளவு கடந்த சந்தோஷம் உண்டானது. பின்னர் எழுதியோர்களின் பெயர் குறிக்கப்படாமல் இதுபோலவே பல விஷயங்கள் வெளிவரலாயின. 'தம் பெயர் வெளிவர விரும்பாப் பிரசித்தி பெற்ற ஒரு பெரியோர் அவற்றை எழுதிவருகிறார்' என்று நினைத்தே அவன் தமையன் அவற்றைப் பத்திரிகையில் வெளியிட்டு வந்தான்.

பெஞ்சமினுக்கு உண்டான மகிழ்ச்சிக்களவில்லை. இவ் விஷயத்தை நெடுநாள் அவன் மறைத்துவைக்க முடியவில்லை. ஒருநாள் உண்மையை வெளியிட்டு விட்டான். உடனே அங்கு அடிக்கடி வந்து சம்பாஷித்துச் செல்லும் அறிவாளர் பலர், இவனைப் பெரிதும் பாராட்ட ஆரம்பித்து விட்டனர். இதைக்கண்ட சகோதரன் தன் தம்பி மீது பொறாமையே கொண்டான். தன்னினும் தன் தம்பியை அவர்கள் மிகவும் உயர்த்திப் பேசுவதைக் கேட்க அவன் மனம் சகிக்கவில்லை. அதனால் அவன் தன் சகோதரனை அகாரணமாய் அடிக்கவும் வையவும் வெகு கொடுமையாய் நடத்தவும் ஆரம்பித்தான்.

'எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வம் கேட்கு' மன்றோ?. பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களிற் சில அரசியல் நடத்துவோர்க்கு வெறுப்பாயிருந்ததால், பத்திராதிபனை அத்தமையனைத் தண்டித்துவிட்டனர். அவன் சிறைவாசம் செய்ய வேண்டியவனானான். அச்சமயம் பெஞ்சமினே அப்பத்திரிகையின் அதிபனாயிருந்து அதை நடத்தலானான்.

தமையன் சிறைக்கூடத்தினின்று வெளிவந்ததும், அவனைப் பத்திரிகை நடத்தக்கூடாதென்று அரசாங்கத்தார் தடுத்தேவிட்டனர். இது காரணமாக, பெஞ்சமினுக்கும், அவனுக்கும் ஏற்பட்டிருந்த பரஸ்பர ஒப்பந்தத்தை, சீக்கிரத்திலேயே அவர்கள் 'ரத்து' செய்து கொண்டு விட்டனர். பெஞ்சமினே பத்திரிகை நடத்திவர ஏற்பாடு நடந்தது. இவ் வேற்பாட்டின்படி பத்திரிகை சிறிது காலம் நடைபெற்றுவந்தது. ஆயினும் பத்திரிகைக்கும் அது வெளியாகும் முத்திராலயத்திற்கும் அவன் தமையனே தலைமையும் உரிமையும் பூண்டிருந்தான். இருந்துமென்ன? தமையனுடைய பொறாமை மட்டும் நாளுக்குநாள் விருத்தியாகியே வந்தது. அதனால் பெஞ்சமின், அப்பத்திரிகை வேலையினின்று நீங்கி வேறெங்கேனும் சென்று பிழைக்க எண்ணினான். இதற்கு அவன் பெற்றோர் உடன்படவில்லை. ஆதலால் அவன் காலின்ஸ் (Collins) என்ற நண்பனது உதவியாலும், தன்னிடமிருந்த பழம்புத்தகங்களை விற்ற சிறு

தொகைகொண்டும் ஒருவரும் அறியாமல் கப்பலேறிப் பதினேழாம் வயதிலேயே போஸ்டனுக்கு 300 மைலுக்கப்பாலுள்ள நியூயார்க் பட்டணம் வந்து சேர்ந்தான்.

(தொடரும்)

P. சுந்தரராஜையங்கார், B.A.
சரித்திராசிரியர், விருது நகர் க்ஷத்திரிய வித்தியாசாலை.

1926-ஆம் இன்டர்மீடியேட் பரீக்ஷைக்குரிய முக்கிய வினாக்கள்.

வியாசம்: 3-மணி நேரம்.

பின்வரும் மூன்றனுள் இரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க. விடை ஒவ்வொன்றும் மூன்று பக்கங்கட் கதிப்படல் ஒண்ணாது.

1. தமிழ்மக்கள் போர்முறை.
2. கோவிந்தை திருமணம்.
3. அன்டோனி க்ளியோபாட்ராவின் குணாதிசயங்கள்

1927-ஆம் இன்டர்மீடியேட் பரீக்ஷைக்குரிய முக்கிய வினாக்கள்.

வியாசம்: 3-மணி நேரம்.

1 யூகியின் வரலாறு.
2. நீர்விழா நிகழ்ச்சி,
3. வில்லியம் மேக்பீஸ் தாக்கரே என்பவரின் வரலாறு.

☞ இம்மூன்றனுள் எந்த இரண்டையேனும் பற்றி மும்மூன்று பக்கங்கட் கதிகப்படாமல் வரைக.

ஒரு வியாச போதகர்.

விநோதக் கூற்று

பிரயாணி:- மேலூருக்குப் போகும்வழி எது ஐயா?

வழிப்போக்கன்:- (நாற்சந்தியில் நின்ற ஒரு கைகாட்டி மரத்தைச் சுட்டி) இந்தப் பௌராணிகர் மூலம் அறிந்துகொள்ளும்.

பிர:-என்ன ஐயா? கைகாட்டி பௌராணிகராவதெப்படி?

வழி:-எப்படியா? நீர் செல்ல இருப்பதோ மேலூர். அதற்குவழி அறிவிக்க அவராலாகும். கைகாட்டியாலும் ஆகும். காட்டும் வழியில் அவரும் செல்லார். இதுவும் செல்லாது. ஆதலின் கைகாட்டியும் பௌராணிகரும் ஒன்றுதானே?

ரா. மிருத்திஞ்சயன்.

*இடையனும் கலைஞனும்.

ஊதியச் சிந்தனை ஏதும் இல்லாமல்
நகர்களுக் கப்பால் தகர்பல மேய்க்கும்
இடையன் ஒருவன் இருந்தனன். தலை எலாம்
வெள்ளிய நரையுடை விருத்தாப் பியனவன்.
அனுபவ முதிர்ச்சியால் அறிஞன் ஆயினோன்.
கோடை கால வேடைப் பொழுதிலும்
கார்கா லத்துக் கடுங்குளி ரதனிலும்
ஆடுகள் தமைமேய்த் தவன்கிடை மறிப்பன்.
களிப்புறு தொழிலிற் கழித்தனன் காலம்.
அழுக்கா(று) அதி அவா அவன்ஏதும் அறியான்.
அவனது புந்தியும் அவன்மெய்ப் புகழும்
பாரினில் எங்கும் பரப்பின அவன் பெயர்.

பள்ளியி னின்றே பல்வகைத் தாய
நீதிசாத் திரமுறை நிரம்பக் கற்ற
வித்தக னொருவன், இத்தகை இடையனின்
புன்குடில் புக்குப் பின்வரும் விதமா
அவனுடை அறிவை அளவிட லாயினன்:

"இத்துணைக் கல்வியும் யாங்குக் கற்றனை?
எண்ணெய்ச் செலவில் எண்ணரும் நூல்கள்
நடுநிசி யினும்நீ நன்று கற் றனையோ?
பண்டைக் கிரீஸ்,ரோம் பார்த்தறிந் தனையோ?
பிளேட்டோ பெருமதிப் பேணியாய்ந் தனையோ?
மற்றதின் னுடைய மணக்களிம் பகற்றியோன்
சாக்கிரட் டீஸோ? தல்லியி னுடைய
நுட்பக் கருத்தெலாம் நுழைந்துகண் டனையோ?
யூகமுள்ள யூலிஸிஸ் போன்று
சிறிதுமுன் பறியாச் சீமைகள் தோறும்
விதிமோ சத்தால் விடுக்கப் பெற்று

---

*Metrical Translation of "The Shepherd and the Philosopher" by John Gay.

·The Shepherd and the Philosopher.

REMOTE from cities lived a swain,
Unvexed with any cares of gain:
His head was silvered o'er with age.
And long experience made him sage.
In summer's heat, and winter's cold,
He fed his flock and penned the fold:
His hours in cheerful labour flew.
Nor envy nor ambition knew:
His wisdom and his honest fame
Through all the country raised his name.
A deep Philosopher (whose rules
Of moral life were drawn from schools)
The Shepherd's homely cottage sought,
And thus explored his reach of thought:—
Whence is thy learning?—hath thy toil
O'er books consumed the midnight oil?
Hast thou old Greece and Rome surveyed,
And the vast sense of Plato weighed?
Has Socrates thy soul refined?
And hast thou fathomed Tully's mind?
Or, like the wise Ulysses, thrown
By various fates on realms unknown,

---

* இதன் தமிழ் மொழிபெயர்ப்பு இவ்வருடத்திய S.S L.C. மாணவரின் நன்மை கருதி எமது அரும்பொருட்டிரட்டினின்று எடுத்து வெளியிடப்பட்டுள்ளது. ம. கோ.

மார்க்கம் ஓரீ இப்பல மாநகர் போந்து
நாநா மாக்கள் நடை, உடை, பாவனை
விதி, அறிந் தனையோ? விளம்புதி.'' என்ன,
விநயத் துடனே விளம்பினன் இடையன்:—
''கல்வித் துறையையான் கண்டவ னேஅலன்.
மானிடர் இயல்பும் மற்றவர் நியமமும்
வித்தையும் அறியயான் வேற்றிடம் செல இலை.
கரவினில் மானிடன் கைதேர்ந் தவன்: அவன்
நாட்டம் ஆயும் நோக்கையும் ஏய்ப்பன்.
நம்மை நாமே நன்கறி யோமே
ஆயின், பிறர்குணம் ஆராய் வதனால்
அறிவின் முதிர்ந்தோர் ஆகுவர் எவரே?
அற்பமே ஆயஎன் அறிவும் இயற்கைச்
சிருட்டியில் வடித்துத் திரட்டியவைதாம்.
மற்றிதி னின்றே உற்(று) உதித்தன என்
வாழ்நாள் கழிக்கும் வகைக்காம் நீதிகள்.
தீச்செயல் கலையான் தீர வெறுத்ததும்
இன்னதி னின்றே என்பதூஉம் அறிக.
தேனீ தினம்தினம் செய்திடும் உழைப்பே
உலையா முயற்சிக்(கு) ஊக்கிய(து) என்னை,
எண்ணித் துணியும் எறும்பினைக் கண்டும்
பின்னே வேண்டுவ இன்னே தேடா
திருக்க யாரால் இயலும்? தன்னினம்
தனில்மிக நம்பத் தகும் என் நாயே
நன்றி என்னும் நற்கட மினை என்
உள்ளம் தன்னில் ஒளிரச் செய்தது.
திரேயின் பக்தியும் சிரத்தையும் பார்த்து
விசுவா சத்துடன் வேலையைச் செய்வேன்.
கபோதத் திருந்து கடிமணக் காதலும்
பத்தினி விரதமும் பண்புறக் கற்றேன்.
குளிர்காற் றுறுமே குஞ்சினைத் தூய
செட்டையிற் காக்கும் பெட்டைக்கோழியும்
உயரப் பறக்கும் ஒவ்வொரு பறவையும்
பெற்றோர் கடன்எனப் பேணச் செய்தன.

Hast thou through many cities strayed,
Their customs, laws, and manners weighed?
The Shepherd modestly replied,
I ne'er the paths of learning tried;
Nor have I roamed in foreign parts,
To read mankind, their laws and arts.
For man is practised in disguise.
He cheats the most discerning eyes.
Who by that search shall wiser grow,
When we ourselves can never know?
The little knowledge I have gained,
Was all from simple nature drained:
Hence my life's maxims took their rise;
Hence grew my settled hate to vice.
The daily labours of the bee
Awake my soul to industry.
Who can observe the careful ant,
And not provide for future want?
My dog (the trustiest of his kind)
With gratitude inflames my mind;
I mark his true, his faithful way,
And in my service copy Tray.
In constancy and nuptial love,
I learn my duty from the dove.
The hen, who from the chilly air,
With pious wing, protects her care.
And every fowl that flies at large,
Instruct me in a parent's charge.

இகழ்ச்சி எளனம் அகற்றும் முறைமையும்
பிரகிரு தியினிற் பெற்றனன் அதனால்
மிஞ்சிய கர்வம் மேலுறக் கொண்டே
எவரையும் என்றும் எடுத்தெறிந் துரைபேன்.
ஒகையி லாமுகக் கூகையை மானிடர்
இகழ்ந்திடும் காலே, மிகுந்த யோசனை
உள்ளார் போன்ற ஒப்பாசாரம்
வாய்ந்தோர் ஞான வான்களா வாரோ?
அதிகப் பேச்சுகள் அனைத்தும்வெற் றுரைகளே.
ஆதலின், என்னா அடக்கி ஆண்டிடுவேன்.
சொற்பொழி(வு) என்னும் சோலையிற் றப்புவோம்.
ஏகம் கரைதலைக் கருதுவோர் எவரே?
சூழ்ச்சி உளங்கொடு துரோகசிந் தையனாய்
அயலான் உரிமையை அபகரிப் பதும்இலை:
கொள்ளைக் குணமே குடிகொண் டிருக்கும்
விலங்குக ளிடத்து வெறுப்புடை யோம்நாம்.
உவணம் வல்லூ(று) ஓராய் எனும்இவை
அடையும் கதிப்பயன் அவைகட்(கு) ஏற்றதே.
பாம்பைத் தேரையைப் பார்த்ததும் உண்மையில்
நாம்வெறுப் புறுவது ஞாயமே அன்றோ!
வன்கண் குறளை வன்மம் எனும்இவை
நீண்டுழி அவற்றினும் தீவிடம் உமிழ்வன.
இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும்
சிந்திப் பதற்காம் சிலகுறிப் புடையது.
சற்குணம் உடையோர் சற்றும் பயனிலா
அற்பப்பொருளினும்அறநெறிகாண்பர்'' என்(று)
இன்னணம் உரைப்ப இயம்புவன் கலைஞன்:—

"புகழ்உனக்கியற்கையிற்பொருந்தியதுண்மையே
உண்மையி லேநீ உரவோன் எனற்(கு) உன்
உத்தம குணங்களே ஒருதனிச் சான்றும்.
நூலாசிரியரை தூக்குவ தடிக்கடி
மமதையே ஆதலின், மானிடர் போன்றே
புத்தகங் களுமே போலித் தன்மைய.

From nature, too, I take my rule,
To shun contempt and ridicule;
I never, with important air,
In conversation overbear.
Can grave and formal pass for wise,
When men the solemn owl despise?
My tongue within my lips I rein;
For who talk much, must talk in vain.
We from the wordy torrent fly:
Who listens to the chattering pie?
Nor would I, with felonious flight,
By stealth invade my neighbour's right.
Rapacious animals we hate:
Kites, hawks, and wolves deserve their fate.
Do we not just abhorrence find
Against the toad and serpent kind?—
But envy, calumny, and spite,
Bear stronger venom in their bite.
Thus every object of creation
Can furnish hints to contemplation;
And from the most minute and mean
A virtuous mind can morals glean"

"Thy fame is just" the sage replies:
"Thy virtue proves thee truly wise.
Pride often guides the author's pen;
Books as affected are as men;

இயற்கை விதிகளை யேகற் றுணர்பவன்
உள்ள துள்ளவா றுண்மையை ஓர்ந்து
தக்கநன் னெறிகளைத் தான்கிரகித் திடுவன்.
பிரகிரு தியினிற் பெற்றஇவ் விதிகள்
பாட சாலைப் பயிற்சி இல் லாமலே
மானிடன் தன்னை மாசறு நடையில்
வல்லோ னாக்கவும், நல்லோ னாக்கவும்
புத்திமா னாக்கவும் போதிய" என்றே.

ம. கோபாலகிருஷ்ணன்

பெண்ணா? புலியா?

இந்த வினாவானது ப்ராங்க் ஆர். ஸ்டாக்டன் (Frank R. Stockton) என்ற நூலாசிரியரது. இவர் கதை ஒன்று சொல்லி, அது சம்பந்தமாக இந்த வினாவை எழுப்பியிருக்கிறார். அக்கதைச் சுருக்கம் வருமாறு:—

வெகு காலத்திற்குமுன் அரைகுறை நாகரீகம் வாய்ந்த அரசன் ஒருவன் இருந்தான். அவன் நாகரீகங்குன்றிய காட்டுமிராண்டிப் பிறப்பினனேனும், அக்கம்பக்க மன்னரிடமிருந்து ஒருவாறு நாகரிகங் கற்றுணர்ந்தவன். அன்பும், அருளும், நடுவு நிலைமையுங் கொண்டு தன் குடிகளை ஆளவேண்டும் என்ற அவா அவனுக்கு இருந்தது. இந் நல்விருப்பு நிறைவேற அவன் கைக்கொண்ட அரசியல் முறை அதிவிநோதமானது:

"ஒருவனை 'அபராதி அல்லது நிரபராதி' என்று கூறுவது மனித சக்திக்கு இயைந்ததன்று" என்பது இவனது எண்ணம். இவன் யாவும் ஈசுவர சங்கற்பப்படியே நடைபெறவேண்டும் என்னும் கொள்கையுடையவன். இக் கொள்கை நிறைவேறுமாறு இவன் தன் மதிவலி கொண்டு ஒரு சூழ்ச்சிசெய்தான்.

ஒரு பொது ஸ்தலத்தில், நீதியில் விருப்புள்ள இம் மன்னன், நியாய மண்டபம் ஒன்று நிருமித்தான். இந்த மண்டபத்தின் ஓர் உன்னதமான இடத்தில், அரசன் விற்றிருக்க அவனது உத்திரவுப்பிரகாரம் உயரிய பீடம் ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு நேரே ஒரேமாதிரியான இரண்டு அழகிய அறைகள் எதிரெதிரே அமைக்கப்பட்டிருந்தன. இவ் வறைகளுள் ஒன்றினுட் புலியும், மற்றொன்றில், குற்றவாளியின் வயதிற்கும் அழகுக்கும் தகுதிக்கும் ஏற்ற ஒரு ஸ்திரீயும் அடைக்கப்பட்டிருப்பார்கள். 'ஸ்திரீ இருக்கும் அறை

(இதன் தொடர்ச்சி 57-ம் பக்கத்தில்)

But he who studies Nature's laws,
From certain truth his maxim draws;
And those, without our schools suffice
To make men moral good and wise."

JOHN GAY.

(56-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்னது,' 'புலியிருக்கும் அறை இன்னது' என்று அறிய ஒருவராலும் இயலாது. குற்றவாளி நியாயமண்டபத்திற்கு வந்ததும் வாராததும், அரசனை வணங்கிவிட்டு, இவ்விரண்டு அறைகளுள் ஒன்றைத் திறக்கவேண்டும். திறந்த அறை புலியுள்ளதாயின், இவன் ஆக்ரத்துடன் வெளிப்பட்டுப்பாயும் அவ் வியாக்ரகத்துக்கு இரையாதல் திண்ணம். இவன் இறந்ததும், சாமணி கேட்கும். அது கேட்டவுடன் இவனது மரணத்தை அறிவிக்குமாறு அரசனால் நியமனம் பெற்ற 'கூலிக்கு மாரடிப்போர்' இத் துக்கசம்பவத்தைப் புலம்பிக் கொண்டே ஊரெங்கும் பரப்புவார்கள் இதையறிந்தவர்கள், இறந்தவன் இளைஞனாயின், அவனது யௌவனத்தையும் எழிலையும் ஆற்றலையும் குறித்தும்; வயோதிகனாயின், போற்றற்குரிய அவனது முதுமையையும், ஆதரவற்ற நிலைமையையும், அறிவையும் குறித்தும்; வருத்தமும் இரக்கமும் கொள்ளுவார்கள்.

இவ்வாறன்றி, குற்றவாளி ஸ்திரீயிருக்கும் அறையைத்திறந்தால், முன்பு கூறியபடி, குற்றவாளியின் அழகு வயது முதலியவற்றிற்கேற்ற ஒருத்தி அதினின்று வெளிவருவள். அக்கணமே மங்கலமணி ஓசை கேட்கும். அப்பொழுதே அங்கேயே மணவினையை இனிது நிறைவேற்ற ஒரு புரோகிதர் தயாராய்க் காத்துக்கொண்டிருப்பர். குற்றம் சாட்டப்பட்டவன் ஏற்கனவே மணம் முடித்தவனாயிருந்தாலும், மணமுடியாது தான் காதலித்த ஒருத்தியை மணக்கத்தக்க நிலையினனாயினும், விவாகத்தில் வெறுப்பேயுள்ளவனாயினும், (அறையினின்றும் வெளிப்பட்ட) இந்த ஸ்திரீயை மணந்தே தீரவேண்டும். இவ்வளவும் ராஜ ஆக்ஞை. குற்றஞ் சாட்டப்பட்டவன் அடையும் சுகமும் துக்கமும் ஈச்வரனுடைய திருச்சித்தத்தினால் நிதானிக்கப்படுவதாதலின் இக்கடிய நீதி முறையைக் கையாடியபோது, பிரஜைகள் தம் மன்னனைக் குறைகூறுவதற்கும், அவன் செய்கையைப்பற்றி முணுமுணுப்பதற்கும் இடமில்லாதிருந்தது. (இன்னும் வரும்)

தி. அண்ணாசாமிஐயர், கூத்தூர்.

வில்லியம் கௌப்பர்.

தீவிரபுத்தி, சாந்தம், தெய்வபக்தி, சுதேசாபிமானம் முதலியவற்றிற் சிறந்த இப்புலவர் பெருமான், ஆங்கிலர்களின் தவப்பயனாக 1731-௵ நவம்பர்-மீ 26-உ பர்க்ஹாம்ஸ்டெட் (Berkhamstead)டில், ஹெர்ட்பர்ட்ஷயர் (Hertfordshire) என்னும் மாகாணத்திற் பிறந்தவர். இவர் பரிகாசமாயும் சிரிக்கச்சிரிக்கவும் கவிபாடும் வன்மை வாய்ந்தவர். இவர் தந்தை அவ்வூர் மடாதிபதி. தம் ஆறாவது வயதில் தாயை இழக்கும் துர்ப்பாக்கியம் இவருக்கு நேரிட்டது. ஏழாவது வயதில் இவரைப் பள்ளிக்கனுப்பினார்கள். 18-வது வயதில் சட்ட கலாசாலையிற் படித்து 23-ஆவது வயதில் நியாயவாதியாயினர். 32-ஆவது வயதில் (House of Lords) "பிரபுக்கள் மகாசபை"யில் ஓர் பெரிய உத்யோகம் இவர்க்குக் கிடைத்தது. கிடைத்தும் என்? அப்பெரிய சபையில் நுழைந்தது அதுவே முதல்தடவையாதலின், இயற்கையில் அபலராயிருந்த அவர், 'அவையஞ்சி மெய்விதிர்த்து'ச் சித்தப்பிரமைக் குள்ளாயினர். கிறுக்குப் பலமாகப் பிடிக்கவே, மும்முறை அவர் தற்கொலை செய்துகொள்ள முயன்றனர். பிறகு (St. Albans) 'ஸேயிண்ட் ஆல்பன்ஸ்' என்ற பைத்திய வைத்தியசாலையில் அவரை வைத்துக்காத்தனர். அவ்விடம் ஒருவருஷமிருந்து குணப்பட்டுப் பைத்தியம் தீர்ந்து, வெளிக்கிளம்பித் தம் சொந்தக்காரரிடமிருந்தும் சிநேகரிடமிருந்தும் பொருளுதவிபெற்று, ஹண்டிங்க்டன் (Huntingdon) என்னும் கிராமத்தில் வசித்தனர். 1773-௵ மறுபடியும் இவர்க்குக் கிறுக்குப்பிடித்து விட்டது. விடவே, அப்பொழுதும் அவர் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தார். இப் பைத்தியம், நீங்காமல் இரண்டுவருஷம் இருந்தது. மீதி வாழ் நாட்களெல்லாம் அவர் மனக்கவலையாற் பீடிக்கப்பட்டாரென்றே தெரிகிறது. 1781-௵ ஆஸ்டன் என்னும் சீமாட்டியின் வேண்டுகோட்கிணங்கி, 'குறித்தவேலை' (Task), 'ஜான்கில்பின்' முதலியன எழுதினர். எழுபதாவது வயதில், இகம்நீங்கிப் பரம்சென்றார். வேடிக்கையாகவும் இயற்கை யழகுகளை உணர்ந்து வர்ணித்தும் இல்லற வாழ்க்கையைச் சிறப்பித்தும், பொதுஜனோபகாரமாகவும் 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட'வும், எளிதிற் பொருள் விளங்கவும், படிப்போர்க்கு இனிமையும் உருக்கமும் பயக்கவும் எழுதுந் திறமையில், இவரினும் மேற்போனவர் எவருமிலர் என்பது அறிஞர்களின் துணிபு. இவரியற்றிய நூல்களும் பாடல்களும் பலவுள. இவர் செய்த பெருநூல்களுள் முக்கியமானவை 'உண்டாட்டுரை' (Table Talk,) பிழைகளின் வளர்ச்சி', (Progress of Errors) 'சம்பாஷணை' (Conversation) 'தருமம்' முதலியனவும் ஹோமர் 'மகாகவிநூல்'களின் மொழிபெயர்ப்புமே. — பத்திரிகாசிரியர்.

திருமுருகாற்றுப்படை.

முன்னுரை

பத்துப்பாட்டு.

அமிழ்தினும் இனியது தமிழ் மொழியாகும். இம் மொழி வழங்கும் நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்பது பெயராகும். இம் மொழியை வழங்குவோரெல்லாம் 'தமிழர்' ஆவர். எல்லையறு பரம் பொருள் எவர்க்கும் உரிய பொருளாக விளங்குவதுபோல், தமிழ் மொழியும், அதனையுரைக்கும் எவர்க்கும் உரியதாகும். இம் மொழியின் கண்ணே நன்னறிவு மிக்க புண்ணியப் புலவர்கள் பலர் பல சிறப்பட்ட நூல்கள் இயற்றியுள்ளார்கள். அவைகளுள் இலக்கண நூல்களாக எழுந்தவைகள் சில; நலம்பொதி இலக்கியங்களாக இலங்குவனசில. அவ்விலக்கிய நூல்களைப் பல பகுப்புகளாக அவை களின் செவ்விநோக்கிப் பகுத்துள்ளார்கள். 'காவியங்கள்' என்ற பெயரொடு கவினுற்று விளங்குவன சில. 'பத்துப்பாட்டு' என்ற பெயரொடு பகரப்படுவன சில. 'எட்டுத் தொகை' என்று இயம்பப் படுவன சில. 'பதினெண் கீழ்க்கணக்கு' என்று கணிக்கப்படுவன பல.

இவைகளுள் 'பத்துப்பாட்டு' என்று பகரப்படுவன, 'திருமுருகாற்றுப்படை, 2. பொருநராற்றுப்படை, 3. சிறுபாணாற்றுப்படை, 4. பெரும்பாணாற்றுப்படை, 5 முல்லைப்பாட்டு, 6. மதுரைக் காஞ்சி, 7. நெடுநல் வாடை, 8. குறிஞ்சிப்பாட்டு, 9. பட்டினப்பாலை, 10. மலைபடுகடாம்' என்பனவாம். 'மலைபடு கடா'த்திற்கு மற்றொரு பெயர் 'கூத்தராற்றுப்படை' யென்பதாம். ஆகவே, 'பத்துப்பாட்டு' என்ற தொகுதியினுள் ஆற்றுப்படையாக அமைந்துள்ள நூல்கள் ஐந்தாம்.

> "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருக வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து."

பத்துப்பாட்டானது நூறு அடிகளுக்குக் குறையாமலும் ஆயிரம் அடிகளுக்கு மிகாமலும் தொடுக்கப்பட்ட பாக்கள் கொண்டதாம். இப்பாட்டுக்களெல்லாம் அகவற்பாக்களால் ஆக்கப்பெற்றனவாகும்.

> "நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
> ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
> தொடுப்பது, 'பத்துப் பாட்'டெனப் படுமே" என்றும்,
> "அதுவே
> அகவலின் வருமெண அறைகுநர் புலவர்" என்றும்,

ஓதப்பெருஞ் சூத்திரங்களால் மேற் கூறியவைகள் உணரற்பாலன.

இப்பத்துப் பாட்டுக்களும், தமிழ் மொழிக்கே ஒரு பண்டாரமெனக் கூறத்தகும் பெருஞ் சிறப்புக்களையுடையன. சொல்வளமும், பொருள்வளமும் ததும்பி, ஆராய்வார் அகத்தைக் குளிர்விப்பன. இப்பத்துப் பாட்டுக்களுள் ஒன்றாக இருப்பது, 'திருமுருகாற்றுப்படை'யாகும். 'ஆற்றுப்படை' என்பது 'வழிப்படுத்தல்' என்று பொருள்படும். 'புரவலன் ஒருவனிடத்துப் பரிசு பெற்றுவந்த ஒருவன், அங்ஙனம் பெறாது வருந்தும் புலவர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் முதலாயினர்க்குத் தாம் பெற்ற பரிசையும், பரிசில் அளித்தவனைப்பற்றியும் விரித்துக்கூறுவது' ஆற்றுப்படையாகும். இது அகவற்பாட்டால் பாடப் பெறும்.

"புரவலன் பரிசு கொண்டு மீண்ட
விரவலன் வெயில்தெறும் இருங்கானத்திடை
வறுமை யுடன் வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க்(கு) அந்தப்
புரவலன் நா(டு)ஊர் பெயர் கொடை பராஅய்
'ஆங்கு நீ செல்'கென விடுப்பதாற் றுப்படை." என்றும்,
'ஓங்கிய அதுதான் அகவலின் வருமே.' என்றும்

கூறப்படுவனவால் மேற்கூறியன விளங்கும்.

திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு என்னும் தொகை நூலில் முதலாவதாக அமைந்துள்ளதாம். முற்காலத்துச் சான்றோர்கள் இதைத் தண்டமிழ் இலக்கியக்கோவையில் முதன்மணியாகக் கோத்துள்ளார்கள். பிற்காலத்திய பேரறிஞர்களும் இதனுள் அமைந்துகிடக்கும் சைவநலங்களைக்கண்டு, பதினோராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றாக இதைச் சேர்த்து எண்ணியுள்ளார்கள். பெரும் புலவர்கள் பலர், இந்நூலைப்பெரிதும் போற்றிக்கூறிய செய்யுள்கள் பலவுண்டு. அவைகளை இங்கு எடுத்துக்காட்டுவது இயலாதொன்றாயினும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளியுள்ள இரு செய்யுட்களை மட்டும் ஈண்டுக்]குறிக்கின்றேன்.

"இன்னன நினைந்து கீரன் இலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியும்ஆரப் பருகுஅழ தாகிஓதில்
உன்னிய உன்னி யாங்கிங்(கு) உதவுவ தாகிப் பாவுள்
முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை மொழிந்தான்"

"மணிமுடி யரசர் வாழ்வும் மக்கட்பே றதி நல்கிப்
பிணிமுடி பகைஇடுக்கண் பேய்இனுக் கனவு கள்வர்
பணிவிடம் ஒழிக்கும் ஆற்றுப் படைமொழி புலவர் சிங்கம்
அணிகிளர் அலங்கற் றிண்டோள் அறுமுகற் றொழுது சொல்வான்"

இவ்விரு செய்யுள்களிலிருந்து நூலின் பெருமையும், அதனை ஓதுவார் எய்தும் பயனையும் தெள்ளிதிலுணரலாம்.

திருமுருகாற்றுப்படைக்கு மற்ெறாரு பெயராகப் 'புலவராற்றுப்படை' யென்பதையும் வழங்குவர். புலவர் பெருமானாகிய நக்கீரரே இந் நூலையியற்றியவர் ஆவர். நக்கீரரது வரலாற்றையும், நூல் வந்த வரலாற்றையும் சீகாளத்திப் புராணத்து அமைந்துள்ள 'நக்கீரச்சருக்க'த்துள் விரிவாய்க் காணலாம்.

'திருமுருகாற்றுப்படை' யென்பது, 'திருமுருகனிடத்து அவனது திருவருளைப்பெற விரும்பிய ஒருவனை வழிப்படுத்துதல்' என்ற பொருளைத்தரும் தொடர் மொழியாகும். ஒவ்வொரு ஆற்றுப்படையையும் சற்று நுணுகிப்பார்த்தால், பரிசில் பெறுவான் ஒருவனும், அதை வழங்குவான் ஒருவனும் இருக்கவேண்டுமென்று அறியக்கிடக்கின்றது. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையொழிந்த மற்றைய ஆற்றுப்படைகளில் குறிக்கப்பெற்றுள்ள இரவலர்களும் புரவலர்களும் இந்நாட்களில் கிடையா என்று கூறலாம். ஆனால் திருமுருகாற்றுப்படையிற் குறிக்கப் பெற்றுள்ள இரவலர்களும் புரவலரும் அத்தன்மையர்களல்லர். ஈண்டு புரவலராக விளங்குபவர் முருகப் பெருமானாவார். இவர் அன்றும், இன்றும், என்றும் உள்ளவர். எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர் எல்லாம் உடையவர். அங்ஙனமே பரிசில் பெற விரும்பினர்கள் அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கின்றார்கள்; இனியும் இருப்பார்கள். பெற விரும்பும் பரிசிலோ அம்முருகனது திருவருளாகும். அது வற்றுவள முடையது. எத்துணைவர்க்கு வழங்கினும் வளர்ந்திருக்கும் நிலையினது. ஆகவே, திருமுருகாற்றுப்படையிற் குறித்துள்ள முப்பொருள்களும் முக்காலத்திற்கும் உரியன. இத்தன்மையால் அதை ஒரு ஜீவநூல் என்றே கூறலாம். இக்கருத்துப் பற்றிதான் இதனைப் பத்துப்பாட்டில் முதற் பாட்டாக வைத்தனர்போலும்.

திருமுருகாற்றுப்படைக்குப் 'புலவராற்றுப்படை' என்று மற்றொரு பெயருண்டென்று முன்னரே கூறப்பெற்றுள்ளது. திருமுருகனிடத்து ஆற்றுப்படுத்துவதால் அது இப் பெயரைப்பெற்றதென்பர். 'புலவராற்றுப்படை' யென்ற தொடர், பல பொருள்களைத் தந்து நிற்கும். 'புலவர் கோமானாக விளங்கும் முருகப்பெருமானிடத்து ஆற்றுப்படுத்துவதால் இப்பெயர் பெற்றது' என்பர் ஒருசாரார். 'புலவர் சிங்கமாகிய நக்கீரரால் ஆற்றுப்படுத்தப் பட்டமையால் இப்பெயர் பெற்றது'என்பர் ஒரு சாரார். 'புலவரை ஆற்றுப்படுத்தலால் புலவராற்றுப் படை' யென்பர் ஒரு சிலர்.

(இன்னும் வரும்)

மு. நடேச முதலியார்,
திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

காவலர் பாவலர் நட்பு.

அருண்மடை திறந்த நோக்கமும் வரதா பயங்களு மம்புயக் கரமும்
திருமுகப் பொலிவும் குறுநகை அழகுஞ் செஞ்சடா மகுடமும் மரையின்
மருவுதோ லுடையுஞ் சேவடித் துணையும் மகிழ்சிவ காமிசா யகிசேர்
உருவுமாய்க் கலைசைச் சிதம்பரே சுரரென் உள்ளகக் கோயில்கொண் டனரே.

பண்டைத் தமிழ் நாட்டுப் பிரிவுகளிற் சிறந்தவை சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு, நடுநாடு, தொண்டைநாடு, என்பனவாகும். இவற்றை ஆண்டு வந்தோர் கோல்நிலை திரியாக் கோப்பெருமக்கள். இம் மன்னவரின்கீழ்க் குறுநில மன்னர்களும் பலரிருந்தனர். இம் மன்னர்களும் குறுநில மன்னர்களும், தமிழினையும் தமிழ்ப்புலவர்களையும் இகழாதும், இயன்றளவு போற்றியும் வந்தார்கள். இம்மட்டோ? தாமும் மாசறக் கற்றுக் கவிபாடும் வன்மையுடையராய் விளங்கினர். இவர்களிற் சிலர் பெரும்புகழும், திறமும், வன்மையும் வாய்ந்து விளங்கினர். ஆரியமன்னர்கள், ஆரியப் புலவோர்கட்கு 'அக்ஷர லக்ஷம்' பொன்னுதவிச் சம்மானித்தனரென்பர். இப் புவியரசர்களும், தமிழ்க்கவி யரசர்கட்குத் தக்கமரியாதை செய்துவந்தவர்களே. என்னை? யானை மீதேறிக் கவண்வீசிக்கண்ட நாடும்வளனும் உதவிப் பாடல் பெற்றவர் இம்மன்னர்களில் ஒருவர் என்பதைப் பத்துப் பாட்டால் நன்குணர்தல் கூடும்

இத் தமிழ் மன்னர்கள் அருந்தமிழ்ப் புலமைப் பெருந்தகையாளரை அமைச்சர்களாகவோ, அமைச்சர்களுக்குரிய நிலையிலோ நிறுவி, அவர்கள் வாய்மொழிகளை வேதவாக்கு எனக்கொண்டு ஒழுகி வந்தனர். அத் தமிழ்ப் புலவர்களும் அரசர்களை ஏற்றவமயங்களில் போற்றியும், இடித்துக்கூறியும், நல்வழிப்படுத்துவர். ஆகலின் இவ்வரசர்கள் அரசியல் முறையில் மட்டுமன்றித் தத்தம் குடும்ப காரியங்களில் நேரும் குற்றங்குறைகளையும் புலவர்களிடம் கூறி, அவர் இயம்புமாறு நடப்பர். இத்தன்மையாயினர் பலர் ஒருங்குசேர்ந்து வசித்தலானும், பின், பல்கால் பழகுதலினானும் அறிவு வளர்ச்சியினாலும் உணர்ச்சி யொத்தவராய் முடிவில் நட்பாளராயினர். இத்தகைய நட்பே சிறந்ததாம். என்னை?

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக் குரைகண்ட பரிமேலழகர், "உணர்ச்சி யொப்பின் அதுவே உடனுயிர்நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்கும்" என நன்கறிய ஒதினமையாலென்க. இத்தகைய நட்பினையே தமிழ்நாட்டு மன்னர்களும் தமிழ்ப் பெரும்புலவர்களும்

கொண்டொழுகினர் என்பதனைப் பாரி என்ற குறுநிலமன்னனுக்கும் கபிலர் என்ற புலவருக்கும், இருந்த நட்பாலும், இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனருக்கும், பலகுன்றக்கோட்டத்து நன்னன்சேய் நன்னனுக்கும் இருந்த நட்பாலும் உணரலாம்.

தெள்ளிய பொருள்கூறும் வள்ளுவர் வாய்மொழிக்கு உள்ளியவுரை ஈதென உரைத்த பரிமேலழகர், கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிர் ஆந்தையார்க்கும் உண்டாய 'உணர்ச்சியொத்தல்' என்பதால் உதித்த நட்பின் பெருமையைப் பாராட்டி நினைப்பூட்டியுள்ளார். இது நிற்க.

பொழில்விரிக்கும் பொன்னிநதிபொய்யா தளித்தலின், வளம் பெற்றோங்கும் சோழ நன்னாட்டிற்குத் தலைநகராய்ப் பற்பல காலங்களில் பற்பல நகர்கள் விளங்கின. அவற்றுள் சிறந்தன உறையூர், திருவாரூர், பூம்புகார், முதலியன. இவற்றுள் ஒருகால் சிறந்தோங்கிய உறையூரைத் தலைநகராகக்கொண்டு விளங்கியவன் கோப்பெருஞ் சோழன். இக் கோப்பெருஞ் சோழன் தன் மனைவி மக்களுடன் இனிது வாழ்ந்தனன். மநுநெறிகோடாது அரசுசெலுத்தி வந்தவன். இம் மன்னன் மாசறக் கற்றோனுமாயினன். இவனது அரும்பெருங் குணங்களையும், கல்வி மேம்பாட்டையும், வள்ளன்மையையும்கேட்டுத் தேன் கொள்ளச் செல்லும் ஈக்கள்போல புலவர்கள் நாடிவந்தடைவர். இத்தகைய புலவர் பெருமக்களில் உறையூர்ப் பொத்தியாரும், புல்லாற்றூர் எயிற்றியனாரும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனிடம் சார்ந்து இருந்து பழகிச் சிறந்த நட்பாளர்களாயினர். இவர்கள் நட்புத் திறனை ஈங்கெடுத் தோதப்படுவது.

1. கோப்பெருஞ்சோழனும் புல்லாற்றூர் எயிற்றியனாரும்.

கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் ஓரமயம் மனஸ்தாபமுண்டாயிற்று. சோழன் வெகுண்டு தன்மக்கள்மீது போருக்கெழுந்தனன். இச் செய்தியைக் கேட்ட புல்லாற்றூர் எயிற்றியனார் விரைந்து, அரசனிடம் இததறுவாயில் வந்து, "வெண்கொற்றக் குடைநிழலாற் புகழை விளக்கும் அரசனே! வெற்றிக் கொடி தூக்கும் வேந்தே! பெரிய யுத்தகளத்தின்கண் பலரைக் கொல்லும் திறலோய்! பெரியகடலால் சூழப்பட்ட இந்த அகலிடத்தைக்கொண்ட உலகத்தில் நின்னை எதிர்ததுப் போருக்கெழுந்த இவ் இருவரும் யாவர்? ஆராய்ந்து பார்ப்பாயாக. இவர்கள் ஒருகாலத்து வலிமை பெற்றுப் பெருமை பாராட்டிக்கொண்டிருந்த சேர பாண்டியர்களுமல்லரே. நின் பெருவலி கேட்டும் அவர்கள் நின்னொடு பொருதற்கு வருவரோ? வாரார். வாரார். நீ நின்மக்கட்குப் பகைவனல்லன். போரிலே பகைவர்களைக் கொன்று அஞ்சாது நிற்கும் பல்யானைக் குழாமுடைத் தலைவனே! நீ எங்கும் பரந்துவிளங்கும் புகழை இவ்வுலகில் நாட்டிப் பின் வீரசுவர்க்கம் அடைவாயானல், நின் அரசாட்சி நினக் கெதிர்பொர

வந்திருக்கும் அன்னவர்களுக்கே யுரிமையுடையதல்லவா? அதுவும் நீயறிவாய். இன்னுங் கேட்பாயாக. புகழையே அணிகலனாகப் பூணுவோய்! நின் மைந்தர்கள் அறிவுடையார்களாயின், நின்னையும் யுத்த களத்தில் பகைவனாகக் கருதிக் காண்பரோ? அறிவிலிகளாய அவர்கள் ஒரு சமயம் இப்போரில் தோல்வியுற்றால், 'இவர்கள் நம்முடனேயே பகைகொண்டு போருக் கெழுந்தவர்கள்' என்று கருதி நின்பெருஞ் செல்வத்தை வேறெவர்க்கேனும் அளித்திடுவாயோ? ஒரு சமயம் நீ தோல்வியடைந்தால் நின்பகைவர்களும் நகைத்துக்கூற அழியாப் பழியையும் பெறுவாயே. ஆகலால் நீ கொண்ட தவறான எண்ணம் ஒழிவதாக நின்னுள்ளத்தில் அறப்பெரும் எண்ணங்கள் வாழ்வனவாக. பலரும் நின்னடியில் என்றும் வாழ்க. விண்ணோர்களும் விருந்தாக ஏற்றுக்கொள்ளுமாறு நல்வினையைச் செய்வாயாக." என இன்மொழி அடுக்குப் பாவால் இதமுற விசைத்துக்கோபந் தணிவித்தார். கோப்பெருஞ்சோழன் வெகுளி நீங்கிப் போர்க்களத்தினின்றும் மீண்டனன் என்றால், அம்மன்னர் பெருமான், புலவர்பெருமானிடம் வைத்திருந்த நட்பின் பெருமைதான் என்னே! என்னே!!

(இன்னும் வரும்) இலந்தையடி,

R. S. சாம்பசிவ சர்மன்.

சமாசாரக்கொத்து.

நம் நச்சினார்க்கினியன் அபிவிருத்தியைக்கருதி மாதம் ஒரு ரூபா வீதம் இவ்வருஷம் முழுமைக்கும் ரூ. 12 நன்கொடையளிப்பதாகக்கூறிப் பேருதவிபுரிய முன்வந்துள்ள ஆனைமலை யூனியன் பாங்க் காரியதரிசி ஸ்ரீமத் A.R. ஸ்ரீநிவாச முதலியார்க்கு நன்றியும் பல்லாண்டும் கூறுகிறோம்

எமதுவிடாமுயற்சியை வியந்து, இயன்றவாறு முயன்று சந்தாதார்களைச் சேர்த்தனுப்ப முற்பட்டுள்ள ஸ்ரீமத் S. வேதமுத்து, S.R. கணபதி சுப்ரமணிய ஐயர், எமது நன்மாணவகச் சிரஞ்சீவிகள் சிலர் முதலியோர் அன்பை ஒருபோதும் மறவோம்,

இனி நம் பத்திரிகையில், எழுத்துமாறிய வார்த்தைகளும் குறுக்கு வார்த்தைகளின் அடைப்பும் தவறாமல் வந்துகொண்டிருக்கும். இது சந்தாதாரின் மூளைக்குத் தக்கவேலைக்கும் தமிழறிவு வளர்ச்சிக்கும் காரணமாகும். இது சம்பந்தமான பிறவிஷயங்களை அடுத்த சஞ்சிகையிற் காண்க.

சென்னை மாஜி ஹைகோர்ட் ஜட்ஜும், திருச்சி நாஷனல் காலேஜ் வளர்ச்சிக்குக் காரணராயிருந்தவர்களில் ஒருவரும் அக்காலேஜ் போர்டின் முதல் தலைவரும், 'வெள்ளநிதிக்கமிட்டி', 'ரெயில்வே திருட்டுக்கமிட்டி' முதலியவற்றின் அக்கிராசனராயிருந்து நலம் புரிந்தவரும், ஸெனட் ஸிண்டிக் மெம்பராயிருந்து வித்யா விஷயமாய் உழைத்துவந்தோருமான ஸ்ரீமத் T. V. சேஷகிரி ஐயரின் மரணத்தைக் கேட்டு வருந்துகிறோம். எமது அனுதாபத்தை அவரது மருமகராகிய ஸ்ரீமத் V. முத்துராமலிங்கையர் B. A; B. L; முதலிய அவர் குடும்பத்தார்க்கு அறிவிக்கின்றோம்.

— பத்திராதிபர்